# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசால் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் மின்னணு வாழ்வு சான்றிதழ் (Digital Life Certificate) மூலம் நேர்காணல் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் முதல் ஜீன் மாதம் வரையில் ஓய்வூதியதாரர்கள் தாங்கள் ஓய்வூதியம் பெறும் அலுவலகத்தில் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கருவூல அலுவலகங்களுக்கு நேர்காணலுக்கு வர இயலாத நிலையில் உள்ள ஓய்வூதியதாரர்கள் அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அரசு E – சேவை மையங்களில் நேரிடையாக மின்னணு வாழ்வு சான்றிதழ் (Digital Life Certificate) பெற்று நேகாணல் செய்து கொள்ளலாம்.

அரியலூர் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களில் நேர்காணலுக்கு வரமுடியாதவர்களும்,வெளியூரில் வசிப்பவர்களும் அருகிலுள்ள அரசு E – சேவை மையங்களுக்கு சென்று தங்களது ஆதார் எண், ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களுடன் கைரேகை பதிவு செய்து மின்னணு வாழ்வு சான்றிதழ் பெற்று நேர்காணலை செய்து கொள்ளலாம். இதற்கு சேவை மையத்தால் சேவை கட்டணமாக ரூ.10/– மட்டும் வசூல் செய்யப்படுகிறது. இதில் பதிவு செய்தவர்கள் கருவூலத்திற்கு நேர்காணலுக்கு நேரில் வரவேண்டிய அவசியமில்லை.

அரியலூர் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் அனைவரும் இந்த சேவையை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட கருவூல அலுவலர் திரு.வை.குணசேகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.